# இந்தியாவில் இப்படியொரு முதலமைச்சர் இல்லை!





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்தியா எப்படிப் பார்க்கிறது? ஒரு மாநிலத்தை ஆளும் முதலமைச்சர் என்றா? தி.மு.க. என்ற ஒரு கட்சியின் தலைவர் என்றா? பா.ஜ.க.வை எதிர்க்கும் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளில் ஒரு தலைவர் என்றா? இல்லை!

**பா.ஜ.க.வின் பாசிசத்தை வீழ்த்த உறுதியோடு போராடும் ஒரு தளபதியாகத் தான் இந்தியா அவரைப் பார்க்கிறது. அவரது ஒவ்வொரு சொல்லும், செயலும் இந்தியாவின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருப்பதற்கு இதுதான் காரணம்.**

பா.ஜ.க.வின் உட்கட்சிக் கூட்டத்தில் பேசிய ஒருவர், 'பா.ஜ.க.வை விமர்சிக்கும் கட்சிகள் இந்தியாவில் பல மாநிலங்களில் இருக்கிறது. ஆனால் உண்மையான எதிர்க்கட்சி தி.மு.க. தான். அதன் தலைவர் தான் உண்மையான கொள்கை எதிரியாக இருக்கிறார்' என்று சொல்லி இருக்கிறார். இக்கொள்கை பலம் தான் தமிழ்நாடு முதலமைச்சரை உன்னிப்பாக கவனிக்க வைத்திருக்கிறது.

**திராவிட மாடல் அடையாளமே ஈர்த்தது**

2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர வைத்த மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆட்சியை திராவிட மாடல் ஆட்சி என்று சொன்னார்கள். 'இது ஸ்டாலின் ஆட்சி' என்று அடையாளப்படுத்தவில்லை. திராவிட மாடல் ஆட்சி என்றார். நீதிக்கட்சி ஆட்சியின் தொடர்ச்சி என்று தன்னை அடையாளப்படுத்தினார்.

**“இதனை திராவிட மாடல் ஆட்சி என்று நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன். இதனை ஸ்டாலின் ஆட்சி என்று சொல்லிக் கொள்ள எனக்குத் தெரியாதா? என் பெயரை நானே சூட்டிக் கொள்வதை விட எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியுமா? நான் ஏன் திராவிட மாடல் ஆட்சி என்று சொல்கிறேன்? பலரும் விமர்சிக்கிறார்கள். விமர்சிப்பார்கள் என்று தெரிந்தே ஏன் சொல்கிறேன்? விமர்சிக்கட்டும் என்பதால் தான் சொல்கிறேன்..**

**இது திராவிட மாடல் ஆட்சிதான். இந்த ஆட்சி சமூக நீதியைக் காக்கும் ஆட்சி. 1922 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கிய நீதிக்கட்சியின் வாரிசுகள் நாம். இன்றைக்கு 69 விழுக்காடு இடஒதுக்கீடு நம் மக்களுக்கு இருக்கிறது என்றால் அதற்கு பெரியாரும் அண்ணாவும் நடத்திய போராட்டமும் தலைவர் கலைஞர் போட்ட சட்டமும்தான் காரணம். இன்றைக்கு ஒன்றிய மருத்துவக் கல்வி இடங்களில் 27 விழுக்காட்டை நிலைநாட்டியதும் தி.மு.க.வின் சாதனையாகும். இந்த ஆட்சி சமதர்ம சமநிலையை உருவாக்க நினைக்கும் ஆட்சி.**

**இந்த ஆட்சி மதச்சார்பற்ற சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் ஆட்சி. இந்த ஆட்சி மொழியைக் காத்து இன உரிமையை நிலைநாட்டும் ஆட்சி.**

**இந்த ஆட்சி மாநில சுயாட்சியைப் பெற்று கூட்டாட்சியை உருவாக்கும் ஆட்சி. இந்த தத்துவங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய தத்துவம் தான் திராவிடத் தத்துவம். அதனால் தான் திராவிட மாடல் ஆட்சி என்கிறேன்”** என்று முழங்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

பட்டியலின மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்றைக்கு அனைத்து துறைகளிலும் முன்னேறி இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நீதிக்கட்சி ஆட்சியானது 100 ஆண்டுகளுக்கு முன்னால் போட்ட விதை ஆகும். அத்தகைய பண்பட்ட நிலத்தில் நாம் பயிர் செய்து கொண்டிருக்கிறோம் என்ற நன்றியின் அடையாளமாகத் தான் 'திராவிட மாடல்' என்ற பெயரைச் சூட்டி ஆட்சி நடத்தி வருகிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**★ இந்தியாவுக்கு பாதை காட்டியவர்**

“2024 நாடாளுமன்றத் தேர்தல் என்பது யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதற்கான தேர்தல் அல்ல, யார் ஆட்சி அமைத்துவிடக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் ஆகும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள்.

**“ஒன்றுபட்ட இந்தியாவை வகுப்புவாத பாசிசத்தால் பிளவுபடுத்தி ஒற்றைத் தன்மை எதேச்சதிகார நாடாக மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வை அரசியல் ரீதியாக வீழ்த்தியாக வேண்டும் அது ஒன்று தான் நம்முடைய ஒற்றை இலக்காக இருக்க வேண்டும். ஒற்றைத் தன்மை கொண்டதாக நாட்டை மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்கு கொண்டதாக பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் திட்டமிட்டு ஒன்று சேர வேண்டும். பா.ஜ.க.வை 2024 தேர்தலில் வீழ்த்த நினைக்கும் அனைவரும் ஒன்றாகச் சேர வேண்டும். அந்த ஒற்றுமை உணர்வு வந்துவிட்டாலே வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லி விடலாம்”** என்று தொடர்ந்து சொல்லி வந்தார் முதலமைச்சர் அவர்கள். பாஜகவின் பெரும்பான்மை பலத்தை குறைத்து, கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் ஆட்சி அமைக்க இந்த போர்முறை தான் வழிவகுத்தது.

**★ தமிழ்நாடு பெருமை கொள்கிறது.**

கீழடி மூலமாக தமிழ்நாடின் பெருமை அதிகமாக உயர்ந்து விட்டது. இதனுடன் சேர்த்து முதலமைச்சர் வெளியிட்ட இரும்பின் கால அறிவிப்பு அதிகப் பெருமையை உருவாக்கி விட்டது.

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலம் அண்மையில் கிடைக்கப்பெற்ற காலக்கணக்கீடுகள் இரும்பு அறிமுகமான காலத்தை கி.மு. 4000 ஆண்டின் முதற்பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளது. தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் 5300 ஆண்டுகளுக்கு முன்னர் இரும்பு அறிமுகமாயிருக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பு உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இது ஏதோ நமக்கு நாமே சொல்லிக் கொள்வதாக இல்லை. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் உலகின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. புனே நகரிலுள்ள பீர்பால் சகானிதொல் அறிவியல் நிறுவனம், அகமதாபாத் நகரிலுள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுக்கும் பன்னாட்டளவில் உயரிய நிறுவனமான அமெரிக்க நாட்டு புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வகத்திற்கும் மாதிரிகள் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. தேசிய நிறுவனங்களில் OSL பகுப்பாய்வும் பீட்டா ஆய்வகத்தில் கதிரியக்க காலப்பகுப்பாய்வும் ஒரே தாழியிலுள்ள மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இத்தகைய மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டன.

**“இந்தியாவின் வரலாறு இனி தமிழ் நிலத்தில் இருந்துதான் எழுதப்பட வேண்டும்”** என்று சொல்லி வரும் முதலமைச்சர் அவர்கள், அதனை மெய்ப்பித்துக் காட்டி வருவதன் மூலமாக மானுட வரலாற்றில் உயர்வான இடத்துக்கு உயர்ந்து விட்டார்கள்.

**★ சளையாத போராளி**

**“உன் தந்தையைப் போல நீயும் பிடிவாதக் காரனாக இருக்கிறாயே”** என்று இன்றைய முதலமைச்சர் அவர்களை இளமைக் காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை அனைவரும் அறிவோம். இந்த பிடிவாதம் என்பது கொள்கையை அடைவதற்கு, வெற்றி பெற வைப்பதற்கு பயன்படுத்துகிறார் முதலமைச்சர் என்பதே முக்கியமானது.

டங்க்ஸ்டன் சுரங்கத்தைக் கொண்டு வந்து மதுரை வட்டாரத்தின் வளத்தைக் குலைக்கப் பார்த்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதனைக் கடுமையாக எதிர்த்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். பிரதமருக்கு கடிதம் அனுப்பினார். சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பி.களை வாதிட வைத்தார். **“ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் ஏலம் விட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், நிச்சயமாகச் சொல்கிறேன். ஒன்றிய அரசு ஏலம் விட்டாலும், நிச்சயமாக, உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியை தருவதற்கான வாய்ப்பே கிடையாது. நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது. வந்தால் அதைத் தடுத்தே தீருவோம். அப்படி ஒரு சூழல் வந்தால் இந்தப் பொறுப்பில் நான் இருக்க மாட்டேன்”** என்று சட்டமன்றத்தில் சொன்னார் முதலமைச்சர் அவர்கள். அதனால் தான் அந்த திட்டத்தை திரும்பப் பெற்றது ஒன்றிய அரசு. இப்படி ஒவ்வொரு கொள்கையிலும் சளைக்காத போராளியாக முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதனால் கொள்கையிலும் வென்று காட்டி வருகிறார்கள்.

**★ இந்தித் திணிப்பு எதிர்ப்பு**

ஒருங்கிணைந்த பள்ளிக் கொள்கைத் திட்டத்துக்கு பணம் கொடுப்பதையும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்வதையும் இணைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தான் பணம் என்று பிளாக்மெயில் செய்தது ஒன்றிய அரசு. 'உன் பணமே வேண்டாம்' என்று சொல்லி பிளாக்மெயில் அரசியலை பீதி அடைய வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.



ப.திருமாவேலன்
'கலைஞர் செய்திகள்'
தொலைக்காட்சி
செய்தி பிரிவு தலைவர்

“இந்த திட்டத்தில் கையெழுத்துப் போட்டால் தான் இரண்டாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் பத்தாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் போட மாட்டேன். இரண்டாயிரம் கோடி பணத்துக்காக இன்று கையெழுத்துப் போட்டால் இரண்டாயிரம் ஆண்டு பின்னோக்கி இந்த தமிழ்ச் சமுதாயம் போய்விடும். அந்தப் பாவத்தை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்யமாட்டான்” என்று சொன்ன சொல்லில் தான் இன்றைய முதலமைச்சரின் முழு அடையாளம் அடங்கி இருக்கிறது.

**★ கொள்கை உறுதி**

ஒரே மதம் ஒரே மொழி ஒரே பண்பாடு ஒரே உடை ஒரே உணவு என்று உருவாக்கப்பார்க்கிறது பா.ஜ.க. இதனை உறுதியான முறையில் எதிர்த்து வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதற்கு எதிராக அவர் வைக்கும் வாதங்கள், டெல்லி மீடியாவையும், பா.ஜ.க. மாநிலங்களையும் உன்னிப்பாக கவனிக்க வைத்தது.

“ஒரே அரசு என்ற நிலையை உருவாக்க இந்தியாவில் உள்ள மாநிலங்களை அழிக்கப் பார்க்கிறார்கள். ஒரு நேரத்தில் தேர்தல் என்பதை காலப் போக்கில் ஒரே தேர்தலாக ஆக்கப் பார்க்கிறார்கள். இது ஒற்றையாட்சிக்கு வழிவகுக்கும். இன்னும் சொன்னால் ஒற்றை தனிமனிதர் கையில் அதிகாரத்தைக் கொண்டு போய் சேர்க்கும். இது பா.ஜ.க. என்ற கட்சிக்கே கூட நல்லதல்ல என்று நான் முன் கூட்டியே எச்சரித்திருக்கிறேன். இன்றைக்கு பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்கும் நரேந்திர மோடியை சர்வாதிகாரியாக ஆக்கவே இந்தச் சட்டம் பயன்படும். இது தெரியாமல் பா.ஜ.க.வினர் ஆதரித்து வருகிறார்கள்” என்று சொன்னார் முதலமைச்சர் அவர்கள்.

இது பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளின் மனதையும் மெல்ல மாற்றிக் கொண்டிருக்கிறது.

**★ முதல் முதலமைச்சர்!**

**“மும்மொழித் திட்டத்தை ஏற்காவிட்டால் ரூ.2152 கோடி நிதியைத் தர முடியாது என்று சொல்கிறீர்களே? தமிழ்நாடு வாரி வாரி வழங்கும் வரியைத் தரமாட்டோம் என்று சொல்வதற்கு எனக்கு ஒரு நொடி போதும்.”** என்று சொன்னதன் மூலம் பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞரின் கொள்கை வாரிப்பாக உயர்ந்து நிற்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கொடுத்துப் பெறுவதுதான் கூட்டாட்சித் தத்துவம் என்பதை மிகச் சரியாக விளக்கினார் முதலமைச்சர் அவர்கள்.

பல்வேறு இன கலாச்சார வேறுபாடுகளைக் கொண்ட இந்த நாட்டின் ஒற்றுமைக்கும் நிலையான வளமான எதிர்காலத்துக்கும் தேவையான கூட்டாட்சிக் கொண்டதாக உருவாக்க மாநில சுயாட்சியில் கழகம் அழுத்தமான நம்பிக்கையைக் கொண்டுள்ளது என்பதை கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தியாவின் ஒற்றுமையை மாநில சுயாட்சியுடன் கூடிய முழுமையான கூட்டாட்சி முறை தான் காப்பாற்ற முடியும் whole some federalism with autonomy for the states என்பதில் கழகம் உறுதியாக இருந்து வருகிறது. இதற்கான நிகழ்காலப் போராட்டங்களை முன்னெடுத்து வருபவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பேரறிஞர் அண்ணாவின் இறுதி உயில் என்று சொல்லப்படுவது மாநில சுயாட்சிக் கொள்கை தான். தமிழினத் தலைவர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்று, **'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி'** என்பதாகும். இதனை பா.ஜ.க. அரசு உணரத் தயாராக இல்லை. உணர்த்துபவராக அவர்களுக்கு கூட்டாட்சி பாடம் எடுப்பவராக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மட்டும் தான் இந்தியா முழுமைக்கும் ஒற்றை முதலமைச்சராக இருக்கிறார்.

**திட்டங்களைச் செயல்படுத்துவதில் முதல் முதலமைச்சராகவும் அனைத்து வளர்ச்சிக் குறியீடுகளிலும் தமிழ்நாட்டை வளர்ப்பதில் முதல் முதலமைச்சராக**

**இந்தியாவுக்காக வாதாடுவதில் முதல் முதலமைச்சராக**

**இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் குரல் கொடுப்பதில் முதல் முதலமைச்சராக**

**மற்ற மாநில முதலமைச்சர்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்கும் முதல் முதலமைச்சராக திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.**

**இந்தியா வாழ அவரை வாழ்த்துவோம். இந்தியாவை வாழ்விக்க அவரை வாழ்த்துவோம்.**